பெரியாழ்வார் அருளிச் செய்த
பெரியாழ்வார் திருமொழி
நான்காம் பத்து

ஆறாம் திருமொழி - காசுங்கறையுடை
பெற்ற பிள்ளைகளுக்குப் பரமபுருஷனுடைய திருநாமங்களை
இட்டு அழைக்கும்படி மனம் திருந்தாதார்க்கு உபதேசித்தல்

** காசும் கறையுடைக் கூறைக்கும் * அங்கோர் கற்றைக்கு
மாசையினால் * அங்கவத்தப் பேர் இடும் ஆதர்காள்! **
கேசவன் பேர் இட்டு * நீங்கள் தேனித்திருமினோ *
நாயகன் நாரணன் * தம் அன்னை நரகம் புகாள் 1

அங்கொரு கூறை * அரைக்குடுப்பதன் ஆசையால் *
மங்கிய மானிட சாதியின் * பேர் இடும் ஆதர்காள்! **
செங்கணெடுமால்! * சிரீதரா! என்றழைத்தக்கால் *
நங்கைகாள்! நாரணன் * தம் அன்னை நரகம் புகாள் 2

உச்சியில் எண்ணெயும் * சுட்டியும் வளையும் உகந்து *
எச்சம் பொலிந்தீர்காள்! * என் செய்வான் பிறர் பேர் இட்டீர்? **
பிச்சை புக்காகிலும் * எம்பிரான் திருநாமமே *
நச்சுமின் * நாரணன் தம் அன்னை நரகம் புகாள் 3

மானிட சாதியில் தோன்றிற்றோர் * மானிட சாதியை *
மானிட சாதியின் பேர் இட்டால் * மறுமைக்கில்லை **
வானுடை மாதவா! * கோவிந்தா! என்றழைத்தக்கால் *
நானுடை நாரணன் * தம் அன்னை நரகம் புகாள் 4

மலமுடை ஊத்தையில் தோன்றிற்றோர் * மல ஊத்தையை *
மலமுடை ஊத்தையின் பேர் இட்டால் * மறுமைக்கில்லை **
குலமுடைக் கோவிந்தா! * கோவிந்தா! என்றழைத்தக்கால் *
நலமுடை நாரணன் * தம் அன்னை நரகம் புகாள் 5

நாடும் நகரும் அறிய * மானிடப் பேர் இட்டு *
கூடி அழுங்கிக் * குழியில் வீழ்ந்து வழுக்காதே **
சாடிறப் பாய்ந்த தலைவா! * தாமோதரா! என்று
நாடுமின் * நாரணன் * தம் அன்னை நரகம் புகாள் 6

மண்ணில் பிறந்து மண்ணாகும் * மானிடப் பேர் இட்டு * அங்
கெண்ணம் ஒன்றின்றி இருக்கும் * ஏழை மனிசர்காள்! **
கண்ணுக்கினிய * கருமுகில் வண்ணன் நாமமே
நண்ணுமின் * நாரணன் * தம் அன்னை நரகம் புகாள் 7

நம்பி நம்பி என்று * நாட்டு மானிடப் பேர் இட்டால் *
நம்பும் பிம்பும் எல்லாம் * நாலு நாளில் அழுங்கிப் போம் **
செம்பெருந்தாமரைக் கண்ணன் * பேர் இட்டு அழைத்தக்கால் *
நம்பிகாள்! நாரணன் * தம் அன்னை நரகம் புகாள் 8

ஊத்தைக் குழியில் * அமுதம் பாய்வது போல் * உங்கள்
மூத்திரப் பிள்ளையை * என் முகில் வண்ணன் பேரிட்டு **
கோத்துக் குழைத்துக் * குணாலம் ஆடித் திரிமினோ *
நாத்தகு நாரணன் * தம் அன்னை நரகம் புகாள் 9

** சீரணிமால் * திருநாமமே இடத் தேற்றிய **
வீரணி தொல் புகழ் * விட்டுசித்தன் விரித்த **
ஓரணி ஒண்தமிழ் * ஒன்பதோடு ஒன்றும் வல்லவர் *
பேரணி வைகுந்தத்து * என்றும் பேணி இருப்பரே 10

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்